ISSN 2792 - 1050

# வெண்ணிலா

காலாண்டிதழ்.
QUARTERLY.

கவிதை மஞ்சரி.
VENNILA - Poetry Inflorescence.











50/=

இதழ்: 04 - ஜனவரி 2022.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்ணிலா
கவிதை மஞ்சரி.
VENNILA - Poetry Inflorescence.

**இதழ்: 04 - ஜனவரி 2022.**

**ஆசிரியர்: கவிஞர் எஸ் ஏ கப்பார்.**
**முகவரி: 378/2, ஸம் ஸம் வீதி, மருதமுனை - 03 # 32314, இலங்கை.**

**மின்னஞ்சல்:** kavignarsagaffar@gmail.com
**தொடர்பு:** 07 5858 5656 / 077 6968 671.
**வட்ஸ்அப்:** 077 6968 671.

ISSN 2792 - 1050

# ஜுனைதா ஷெரீப்

1940 ஆம் ஆண்டு காத்தான்குடியில் பிறந்த ஹஜ்ஜி மொஹமட் மொஹமட் ஷெரீப் அவர்கள் 1958 ஆம் ஆண்டு தனது 18வது வயதில் ஆசிரியராக நியமனம் பெற்றார். 1975 ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்த அன்னார், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும் முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளராகவும் புனர்வாழ்வு அதிகார சபையின் மேலதிக பொது முகாமையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர், 1967 ஆம் ஆண்டிலிருந்து "ஜுனைதா ஷெரீப்" என்ற புனைப் பெயருடன் எழுத ஆரம்பித்தார்.

80 வயதைக் கடந்தும் மனைவி காலமாகிவிட்ட நிலையிலும் இறுதி வரை எழுதி வந்தார். "ஜுனைதா ஷெரீப்" என்ற பெயர் மூலமே இவர் அறிமுகமாகியிருந்ததால் அவரை எல்லோரும் ஒரு பெண் எழுத்தாளர் என்றே நீண்ட காலமாக எண்ணியிருந்தனர். ஜுனைதா எனும் தனது மனைவியின் பெயரை இணைத்தே "ஜுனைதா ஷெரீப்" எனும் புனைப் பெயரில் எழுதிவந்தார்.

இவர் மட்டக்களப்பில் இயங்கிய நாடகக் குழுவொன்றில் சேர்ந்து பல மேடை நாடகங்களில் நடித்துள்ளார். இவரது மூன்றாம் முறை, சிதைவுகள், சாட்சிகள் இல்லாத சாமத்தில் ஆகியவை தொடர்கதைகளாகத் தினகரன், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

இதுவரைக்கும் 100இற்கும் மேற்பட்ட வானொலி நாடகங்கள் 100இற்கும் மேற்பட்ட சிறுகதைகள் 20 நாவல்கள் ஆகியவற்றைப் படைத்துள்ளார். இவரது "சாணைக்கூறை" எனும் நாவல் 1980இற்குப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்த கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்வியல் குறித்து அறியக்கிடைக்கும் அரிய பொக்கிஷமாகும்.

இவர் தேசிய ரீதியாகவும் மற்றும் வட கிழக்கு மாகாண ரீதியாகவும் நான்கு சாகித்திய விருதுகள், இலங்கை அரசின் கலாபூசண விருது, இலக்கிய வித்தகர் விருது உட்பட இன்னும் பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

இவரது இழப்பு கிலக்கிலங்கைக்கு மட்டுமல்ல முழு இலக்கிய உலகிற்குமே பேரிழப்பாகும்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நாயனை நாமும் பிராத்திப்போமாக!



(1940.09.15 - 2021.10.03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தாளர், வெளியீட்டாளர், கவிதாயினி
# கலைமகள் கிதாயா.

இக் காலப்பகுதியில் நல்ல பல கவிஞர்களை இலக்கிய உலகு தொடர்ச்சியாக இழந்துவருவது பெருங் கவலையை அளிப்பதோடு மட்டுமன்றி பெரும் வேதனையாகவும் உள்ளது.

இதற்கு நல்லதோர் உதாரணம் நவம்பர் 23, 2020ல் தனது 54வது வயதில் இறையடி சேர்ந்த கவிதாயினியின் மரணச் செய்தி.

1966, ஏப்ரல் முதலாம் திகதி சாய்ந்தமருது, கல்முனையில் பிறந்த கலைமகள் ஹிதாயா அவர்கள் ஹிதாயா ரிஸ்வி, ஹிதாயா மஜீத், மருதூர் நிஸா ஆகிய பெயர்களில் இலக்கியம் படைத்து வந்த சிறந்த எழுத்தாளரும், கவிதாயினியும் ஆவார்.

பாடசாலைக் காலத்திலிருந்தே இலக்கியத் துறையில் ஈடுபாடு கொண்டிருந்த இவரின் முதலாவது புதுக் கவிதை 1982, ஏப்ரல் முதலாம் திகதி "மீண்டும்" எனும் தலைப்பிலும், அதே தினம் மரபுக்கவிதை "அன்னை" எனும் தலைப்பிலும் பிரசுரமானது.

அன்றிலிருந்து மரணிக்கும் வரை மரபுக்கவிதை, புதுக்கவிதை, சிறுகதை, கட்டுரை, நெடுங்கதை, மெல்லிசைப் பாடல், விமர்சனம் என 1000க்கும் மேற்பட்ட படைப்புகளைப் படைத்துள்ளார்.



(1966.04.01 - 2020.11.23)

இலங்கை வானொலியில் பல நிகழ்ச்சிகளில் குரல் கொடுத்துள்ள இவர் ரூபவாஹினிக் கவியரங்குகளிலும் பங்குகொண்டுள்ளார். அத்துடன் இலங்கை வானொலி மாதர் மஜ்லிஸ் பிரதித் தயாரிப்பாளராகவும் செயற்பட்டுள்ளார்.

அன்னாரின் மறுமை வாழ்வு ஈடேற்றம் பெற நாமும் வல்ல நாயனைப் பிராத்திப்போம்.

வெளிவந்த நூல்கள்:

- நாளையும் வரும் (புதுக் கவிதைத் தொகுதி) - 1985.
- தேன் மலர்கள் (மரபுக் கவிதை) - 2000. (இது இலங்கை முஸ்லிம் பெண் கவிஞரின் முதல் மரபுக் கவிதைத் தொகுதியாகும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இரட்டைத்தாயின் ஒற்றைக் குழந்தை (புதுக் கவிதைத் தொகுதி) - 2000. (கவிஞர் மஸீதா புன்னியாமினுடன் இணைந்து வெளியிட்டது.)

- சுவடுகள் விழாத் தொகுப்பு நூல்.

பெற்ற கௌரவங்கள் விருதுகள்:

- கலைமகள் விருது 1985, (சாய்ந்தமருது இஸ்லாமிய கலை இலக்கிய ஒன்றியம்.)

- 1988ல் இளைஞர் சேவைகள் மன்றமும், இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து நடத்திய கவிதைப் போட்டியில் அகில இலங்கை ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் முதலாம் இடத்தைப் பெற்றமைக்காக ஜனாதிபதி விருது.

- 1999 ஆம் ஆண்டு "ரத்ன தீப" சிறப்பு விருது பெற்ற முதலாவது பெண் கவிஞர்.

- 2002 இல் முஸ்லிம் கலாசார அமைச்சின் அனுசரணையோடு நடாத்தப்பட்ட உலக இஸ்லாமிய மாநாட்டில் வைத்து இளம் படைப்பாளிக்கான விருது.

- 2007ம் ஆண்டு உயன்வத்தையில் நடைபெற்ற இலக்கிய விழாவில் "கலையரசு" விருது.

- 2009இல் முன்னாள் பிரதியமைச்சர் எஸ். நிஜாமுதீனால் நிந்தவூர் ஆர். கே. மீடியா பணிப்பாளர் ராஜகவி ராஹில் (இலங்கை வானொலி அறிவிப்பாளர்)சார்பில்"கவித்தாரகை" பட்டம்பெற்று கௌரவிக்கப்பட்டார்.

தடாகம் (சிற்றிதழ்)

இவரது இலக்கியப் பணியின் முக்கிய கட்டமாக "தடாகம்" கலை இலக்கியச் சஞ்சிகையைக் குறிப்பிடலாம். ஒரு பெண்ணாகத் தனித்து நின்று "தடாகம்" 12 இதழ்கள் இவரால் வெளியிடப்பட்டன.

அடுத்து,

தடாகம் கலை இலக்கிய வட்டம்.

இவரது தடாகம் கலை இலக்கிய வட்டத்தின் சார்பில் பல எழுத்தாளர்களைக் கௌரவித்துள்ளார். சில நூல்களின் வெளியீட்டு விழாக்களையும் நடத்தியுள்ளார்.

உதாரணமாக,
நாகபூசணி கருப்பையா எழுதிய "நெற்றிக்கண்" கவிதைத் தொகுப்பினை வெளியிட்டு வைத்தார்.

தாரிக்கா மர்சூக் எழுதிய "மனங்களின் ஊசல்கள்" எனும் கட்டுரைத் தொகுதியின் வெளியீட்டு விழாவை குருநாகல் நகர மண்டபத்திலும் நடாத்தி வைத்தார்.

***

நன்றி:
தகவல்கள் இணையம் மற்றும் நாளேடுகளில் பெறப்பட்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்: 01

நடம் பதித்த முத்த கவிஞர்கள்.

**கவிஞர் நீலாவணன்.**
**பிறப்பு : 30-06-1931.**
**இறப்பு : 11-05-1975.**

## முருங்கைக்காய்.

கனநாள் கழிந்தொரு கவிதை சுரந்தது!
கோப்பியொன் றடித்தேன்
கொப்பியை விரித்தேன்
கூப்பிட்டாள் இவள்?
ஏனோ? என்றேன்.

கறிக்குப்
புளியம் பழம்போல றால்
வாங்கியிருக்கின்றேன்.
அதற்குள் வைத்துக் குழம்பு வைக்க
முருங்கைக்காய்தான் ருசியாய் இருக்கும்!
ஆதலால்,
அதோநம் வாசல் முருங்கையின்
உச்சிக் கந்தில்...
ஒன்று...இரண்டு....மூன்று,
நீண்டு முற்றிய காய்கள்
ஒருக்கால்...ஏறி
உசுப்பி விடுங்கள் என்றாள்!

மறுக்கலாம்....
மீண்டும் இரவுகள் வராவேல்!
அதற்காய் இசைந்தேன்
அவள் விருப்பின்படி
முருங்கையில் ஏறி, முறிந்து
விழுந்தேன்!

அந்தோ! வந்த அருங்கவி
இந்த அமளிகண் டெங்கோ மறைந்ததே!

●●●

"வழி"
- கவிதைத் தொகுப்பிலிருந்து.
(நவம்பர் 2002.)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிஞர்

## எம். ஏ. நுஹ்மான்.

**பிறப்பு: 10-08-1944.**

# அழகிய தீமை.

மையிருட் போதில், வானில்
மலர்ந்துள பூக்களின்கீழ்
வையகம் உறங்கும்போது
வழியிலும் இருள் தூங்கிற்று,
கையில் ஓர் விளக்கை ஏந்தி
கவிந்துள இருளினூடு
பைய, என் இல்லம் நோக்கிப்
பாதையில் நடந்து சென்றேன்.

காட்டிடை மலர்ந்த பூக்கள்
கமழ்ந்தன் நுகர்ந்ததால், ஓர்
பாட்டெனா துள்ளத்துள்ளே
பதுங்கிப் பின் வெளியே றிற்று.
நாட்டிய விழியிற் காதை
நடுவிலே, சிறிது தள்ளி
காட்டிய விளக்கில் ஏதோ
கவினுற ஒளிரக் கண்டேன்.

பெருகிய ஒளியில் நீலம்
பிறந்தது கறுப்பு வெள்ளை
மரகத நிறங்கள் சேர்ந்த
வரிகளால், மணியின் கோவைச்
சுருளெனச் சுருண்ட சின்னச்
சுடர் உருக் கண்டேன் ஆம் ஓர்
இருதலை நாகம் கண்டவ்
வெளியிலே கவர்ச்சி கொண்டேன்.

ஒளிர்கிற அதனை நெஞ்சம்
உவந்தது தோளில் மார்பில்
தழுவலாம் என என் நெஞ்சுட்
தாபமும் மேலோங்கிற்று
தழுவலாம், ஆயின் நச்சுத்
தன்மை உண்டன்றோ? ஆம், ஓர்
அழகிய தீமை போன்ற
அதனை நான் அடித்தே கொன்றேன்.

●●●

*26-12-1966.*

"அழியா நிழல்கள்." - கவிதைத் தொகுப்பிலிருந்து
(அக்டோபர் 1982.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிஞர்

## சண்முகம் சிவலிங்கம்.

**பிறப்பு: 19-12-1936. இறப்பு: 20-04-2012.**

## சந்தியிலே நிற்கிறேன்.

சந்தியிலே நிற்கிறேன்
பகல் சாய்கிறது.

மங்கல் இனி வந்துவிடும்
அதைத் தொடர்ந்து வரும் விடிவு.

அதுவரையில்,
இந்த மக்கள் போய்த் துயில்வர்.

இருளகன்று விடிகையிலே,
முந்திடுவார் வேலை செய்வார்
முறுவலிப்பார் பின்னிரவு வந்துவிடும்
போய்த் துயில்வர்.

மறுதினமும் எழுந்திருந்து
"இன்று மட்டும்
இனித்துன்பம் இல்லை" என்பர்
போய் உழைப்பர்.

சந்தியிலே நிற்கிறேன்
பகல் சாய்கிறது.

வயிரண்ணன் வண்டியிலே சம்மாளம்
மாடு இரண்டும், தளர் நடையில்,
சென்ற தடம் செல்லும்.

அங்கே,
திடீரென்று அவர் விழித்து
"இந்தா படித்தா" என்றிரைகிறார்.

எனினும் அந்த, நொந்தலுத்த
மாடுகளோ நோவறியா.

ஆதலினால்,
வந்த நடையே தொடரும்
வயிரண்ணனும் அயர்வார்.

சந்தியிலே நிற்கிறேன்
பகல் சாய்கிறது.

என் இனிய
சுந்தரக் கனவுகள் - வான்
தொடர்கிறது...

சுமந்த மக்கள், வெந்தெழுவார்
சமர் செய்வார்
வில் நிமிர்த்தும் துரியர் படை
வென்றிடுவார் நல்லபல
விதி செய்வார்.

இந்த மக்கள் போய்த் துயில்வர்.

அது வரையில்,
இருள் அகன்று விடிகையிலே,
முந்திடுவார் வேலை செய்வார்
முறுவலிப்பார்.

அவ்வளவே!

●●●

"நீர் வளையங்கள்" - கவிதைத் தொகுப்பு.
(நவம்பர் 1988.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிஞர்

மு. சடாட்சரன்.

**பிறப்பு: 06-05-1940.**

## நிலை உயரவேண்டும்!

காலையிலே மணியடிக்கக் கண்துடைத்தே யோடி
கந்தோரில் பேர்கொடுத்துப் பாலெடுக்கச் செல்வோம்!
காவிரண்டிற் சதங்கையென அட்டையெலாம் கூடிக்
கடித்துவிழ ஓடுரத்தம் கழனிநலம் சேர்க்கும்.

மாலையிலே விறகெடுத்து மனச்சுமைகள் பொங்க
மந்தைவழி வந்துநாங்கள் மக்கள் நலம் சேர்ப்போம்!
நீல வண்ண மேகமெங்கள் நிலையதனைக் கண்டு
நெஞ்சுருகிச் சிந்துகண்ணீர் வெள்ளமெனப் பாயும்!

கல்வியின்றி மக்களெலாம் கால்நடையைப் போலே,
கவலையுற்றுத் தரித்திரராய் மாழுகிறார் இங்கே!
அல்லும் பகல் மெய்வருந்தி உழைத்தெடுக்கும் செல்வம்
ஆடிவரும் குடிவெறியில் மலை நீராய்ப் போகும்!

எல்லோரும் இதயமொன்றாய் ஒரு வீட்டில் கூடி
இனிப்பருந்தி மகிழ்வுறும்நாள் என்றுவந்து சேரும்?
வல்லவனே எங்கள் நிலை பார்த்திரங்க வேண்டும்
வளம் நிறைந்த மலைநாட்டின் நிலை உயர வேண்டும்!

●●●

நன்றி: "கவிஞன்" - காலாண்டுக் கவிதை இதழ் 1 (மார்ச், 1969.)
(தொகுப்பாளர்: பேராசிரியர் எம். ஏ. நுஃமான் அவர்கள்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் மருதூர்க் கொத்தன்.
**பிறப்பு: 06-06-1935. இறப்பு: 19-04-2004.**



## எங்கள் கந்தோர்ச் சிற்றுண்டிச்சாலையில்.

எங்கள் கந்தோர்ச் சிற்றுண்டிச் சாலைக்
கதவுகள் விரியத் திறந்தே உள்ளன.
கதவுகள் விரியத் திறந்தே இருப்பது
வருகை தருவோர் வசதிக் காகவே!

வருகை தருவோர் வசதியே, எங்கள்
குறிக்கோள் என்பதைக் கூறி வைப்பதும்,
தனியே அவரைச் சலிக்க விடோமெனும்
உறுதி உரையை அளிப்பதும் என்கடன்.

சாதியில் உயர்ந்தவர், இழிசனர் என்றோ,
பணக்கா ரர்கள், ஏழைகள், என்றோ,
பேதம் பாராப் பெருமன துடனே
பகலெலாம் இங்கு வருபவர் தம்மொடு
அருகமர்ந் திருந்து, அழகுறப் பேசி,
தோழமை செய்ய எம் துரைமார் போல
யாருளர் இங்கு! யாருளர் இங்கு!

எங்களது கந்தோர்த் துரைமார் பொழுதெலாம்
கன்ரீன், கந்தோர் இரண்டையும் இணைத்து
ஊடுபா ஓடி அலைவது எல்லாம்
வருகை தருவோர் வசதிக்காகவே.

எங்களது கந்தோர்ச் சிற்றுண்டிச் சாலைக்
கதவுகள் விரியத் திறந்தே உள்ளன.
எனக்கு முன்னே இந்தப் பதவியைத்
தனக்குநேர் இன்றித் திறம்படச் செய்த
பையனோ சுத்தப் பைத்தியக் காரன். ▶▶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◀◀

எல்லோரும் இந்நாட்டு மன்னரே என்று
வெல்லமாய் இனிக்க விதந்திடும் மக்கள்
ஆட்சியின் உட்பொருள் அறியாச் சிறுவன்.

ஏழை வாத்தியார் ஒருவரும், எங்களது
ஐயா ஒருவரும், ஸ்க்கிறீன் மறைப்பு
மேசையின் அருகில் அமர்ந்த வண்ணம்
உண்டி அருந்தி இருக்கும் வேளையில்
வாத்தியார் சற்றே ஆத்திரமாகப்
பேசி ஐயாவைப் புடைக்கப் போனார்.

பையன் இடையே பாயா திருந்தால்
அமளி துமளி அதிகரித் திருக்கும்.
வாத்தியார் அடிக்கடி வருவதும், துரையொடு
கதைத்து வேதனை கவிந்து பிரிவதும்,
பார்த்துச் சலித்த பையன், மாஸ்டர் பால்
பரிந்து ஏதோ துரையிடம் பகர்ந்தனன்.

பரிந்தே அவனும் பகர்ந்த போது
சடக்கென அவரின் இடக்கை நீண்டதால்
பையனின் கன்னம் ஒய்யெனச் சிவந்தது.
அவனது சீட்டு அடுத்தநாள் கிழிய
வாய்ப்போ எனக்கு வந்து குதிர்ந்தது.

●●●

நன்றி: "கவிஞன்" - காலாண்டுக் கவிதை இதழ் 2.
(ஜூலை 1969.)
(தொகுப்பாளர்: பேராசிரியர் எம். ஏ. நுஃமான் அவர்கள்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவலர் பஸீல் காரியப்பர்.

**பிறப்பு: 09-05-1940. இறப்பு: 16-03-2006.**

# உயிர்.

எங்கு ஒளிந்திருந்து
எப்படியாய்ச் சென்றதுவோ?

குச்சி அதன் பெட்டியுடன்
கூடி உரசியதால்
விச்செனவே சுடரொன்று
வீறிட்டெழுந்து இங்கு

நின்று சுழன்று
சில நொடியில் மறைந்தது காண்!
சென்றதுவும் எத்திசையோ?
சேர்ந்ததுவும் எங்கேயோ?

எங்கு ஒளிந்திருந்து
எப்படியாய்ச் சென்றதுவோ?

வீணை நரம்புகளில்
விரல்கள் விளையாடத்
தேனாம் இசையுண்டோம்
சேர்ந்ததுவும் எங்கேயோ?

எங்கு ஒளிந்திருந்து
எப்படியாய்ச் சென்றதுவோ?

சுழன்ற சுடராமோ
சுவைத்த இசையாமோ
தளர்ந்த உயிர் உடலை
தவிர்த்த நிலை எதுவோ?

எங்கு ஒளிந்திருந்து
எப்படியாய்ச் சென்றதுவோ?
- *1962.*

●●●



**"ஆத்மாவின் அலைகள்." - கவிதைத் தொகுப்பிலிருந்து.**
**(ஏப்ரல் 2001.)**

**தொடரும்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலைமறை காய்.

## கவிஞர்
## பன்னீர்ச்செல்வமமீர்.



**பிறப்பு: 13-08-1944.**
**இறப்பு: 28-09-2010.**

இலைமறை காயாக வாழ்ந்து மறைந்த நல்ல பல கவிஞர்களினதும் புலவர்களினதும் ஏராளமான பாடல்களும் கவிதைகளும் அவர்களின் மறைவுக்குப் பின் அவர்களது வாரிசுகளினாலோ அன்றி அவர்களது குடும்ப உறவினர்களினாலோ பேணிப் பாதுகாக்காது அப்படியே அழிந்துபோய்விட்ட சோகம்தான் இன்று காணப்படுகிறது. தங்களது ஆக்கங்களைப் புத்தக வடிவமாக்கி அதனைப் பாதுகாக்க பொருளாதார நிலைமை பலருக்கு இடங்கொடுக்கவில்லை. இதனால் எமது பிரதேசத்தைச் சேர்ந்த பல கவிஞர்களின் திறமைகள் அப்படியே அடியோடு மறைந்துபோய்விட்டன. இன்னும் சிலர் தங்கள் கவிதைகளை பத்திரிகைகளுக்கோ அல்லது சஞ்சிகைகளுக்கோ அனுப்பாது மேடைகளிலும் கவியரங்குகளிலும் நினைவஞ்சலிகளோடும் மட்டுமே பகிர்ந்து கொண்டனர்.

அந்த வகையில் அடக்கக்கூடிய எமது பிரதேசத்தைச் சேர்ந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்தான் இஸ்மா லெவ்வை முகம்மது அமீர் அவர்கள். மருதமுனை முகம்மது அமீர், ஐ.எல். எம். அமீர், பன்னீரமீர், பன்னீர்ச்செல்வமமீர் போன்ற பெயர்களில் 1960ம் ஆண்டு முதல் ஏராளமான மரபுக் கவிதைகளையும் இரங்கற்பாக்களையும் இயற்றியவர். இவரொரு மதுரகவி ஆவார்.

இவரது **'மலர்'** என்ற தலைப்பிலான கன்னிக் கவிதை 1964ம் ஆண்டு **'ராதா'** என்ற எம். டி. குணசேன நிறுவனத்தினரால் வெளியிடப்பட்ட பத்திரிகையில் வெளிவந்தது. அதைத் தொடர்ந்து இலங்கையின் தேசியப் பத்திரிகைகளில் இவரது கவிதைகள் வெளிவரத் தொடங்கின. இலங்கை வானொலியிலும் நேரடியாகக் கலந்துகொண்டு கவிதைகள் பாடியுள்ளார்.

இவரது கவிதைகளை மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் தொகுத்தெடுக்கும் முயற்சியில் அவரது மூத்த மகள் **கவிதாயினி மாஹிறா** ஈடுபட்டுவருவது எமக்கு மகிழ்ச்சியளிக்கிறது.

●●●

**(தகவல்: மகள் கவிதாயினி மாஹிறா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தைத் துளைத்துவிட்ட இலக்கிய முள்ளொன்று!

ஈழ பாரதியே! எங்கள் இனியவனே!
பாரதிரப் பாப்புனைந்த பாவலனே
மீளா துயில் தந்துன்னை
மாளாதோன் மடியணைத்துக் கொண்டான்.
பொறுமையெனும் பொய்கையிலே
புளகாங்கிதம் அடைந்தவன் நீ
வறுமையெனும் நறுமணத்தின்
சுவையனைத்தும் நுகர்ந்தவன் நீ
அறுவடையில் அயராமல்
நெடுந்தூரம் பயணித்தாய் இலக்கியத்தில்
குறுநில மன்னனைப்போல் நீ
வடுவற்ற வழிசொன்னாய்
"சமாதானத்தில்"

நற்றமிழின் சொற்சுவையை
நாடுபோற்ற நலம் நவின்றாய்
தமிழால்,
மருதமுனை அன்னைக்கு இலக்கிய
மணி மகுடம் தரித்தவன் நீ
நனி சிறந்தது உன் இயல்பால்.
குட்டிப்புலவன்
இசைவாணர்
ஈழபாரதி
மருதூர்வாணர் என்றெல்லாம் பட்டங்களை
இலக்கியத்தின் இமயங்கள்
இன்முகமீந்து இயம்பி வைத்தனர்.

சிறுகதை,
குறுநாவல்,
நாடகங்கள் என வேறுவேறாய்
சுதந்திரன் தொடங்கி
தினகரன், வீரகேசரி, தினக்குரல் எனத்
தொடர்ந்து கிளைபரப்பி
தான் ஒருவன் தனிப்பாணியில் தமிழ்
வளர்த்தாய்

பிறக்கின்ற ஒருவன் இறக்கின்ற
வரையில்
முடிந்தவற்றை செய்ய வேண்டும்
என்பதை
இடித்துரைக்கும் பிரதிபலிப்பு

இலக்கிய
பணிவிடைகள் பலவற்றை
துணிவுடனே செய்துவிட்டாய்
பிணி தீர்க்கும் ஆசானின்
அரவணைப்பில் சுகம்காண
மணியாரம் சூட்டுகிறோம்,
மாளா தோனிடம்
இருகரம் ஏந்தி.

**- கவிஞர் பன்னீர்ச்செல்வமமீர்.**

●●●

08-05-2009 அன்று மரணமான கலாபூசணம் மருதூர்வாணர் நினைவாக இக்கவிதை தினக்குரல், கிழக்குப் பதிப்பில் 22-05-2009ல் பிரசுரிக்கப்பட்டது. தினக்குரலுக்கு நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சு பொறுக்குதில்லையே!

**'ஏறூர்க்கவிக்கோ'**
**ஏ.ஸீ. அப்துல் றகுமான்.**

தாயினைக் கேலி செய்யும்
தரமில்லாத் தனயன் கண்டு
வாயினால் கூறவொண்ணா
வதைபடு முள்ளத்தோடு
குழறினேன் மனமே பொங்கக்
குமுறினேன் இதயத்தாலே.

பொருளாசையுள்ள மாந்தர்
பூமியில் செல்வம் சேர்க்கக்
கலப்படம் தனைக் கொண்டு
காசுழைப்பார்கள் கண்டு
புலப்படா மனதால் நொந்து
புழுங்கினேன் தீமைகண்டு.

ஊன்தனை உணவாய்க் கொள்ள
உறுத்திடா வகையிலிங்கே
உயிர்வதை செய்யுமந்த
உலுத்தர்கள் செயலைக் கண்டு
துயருறு முள்ளத்தோடு
துடித்திட்டேன் மனமே பொங்க.

தீங்கெனத் தெரிந்தும் தீயோர்
தீமைகள் செய்தல் கண்டு
ஏங்கிடும் நெஞ்சத்தோடு
ஏகனை நோக்கி நானும்
பாவிகள் செயலைத் தீர்க்கப்
பழிகிடந்தழுது நொந்தேன்.

பணத்திமிர் கொண்டோரின்று
பசித்திடுமேழை கண்டும்
மனத்திடை ஈவுகாட்ட
மறுத்திடும் செயல்தான் கண்டு
எரிந்திடும் தீயாய் நெஞ்சம்
ஏங்கியுள் அழுகிறதே.

வாதையும் வருத்தம் கொண்டு
வதைபடு மிளைஞரின்று
போதையும் புகையும் கொண்டு
பொசுங்கிடும் காட்சி கண்டு
எரிமலைக் குழம்பாய் உள்ளம்
எழுதுகோல் வழியே பாயும்.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏங்கி வாழுவதோ?

நோயே வாழ்வாய் பேயாய் மனிதன்
நொந்து புலம்புகிறான் - மனமும்
வெந்து கலங்குகிறான்
வாழுங்காலம் நிம்மதியற்று
மாழயெண்ணுகிறான் - கவலை
சூழ்ந்து வாழுகிறான்.

மனிதம் செத்து புனிதம் கெட்ட
மனத்தோர் தேசமிது - வீணாய்
பிணமே நிறைகிறது
நிகழுங்காலம் நிம்மதி தரவே
உகப்போர் விழைகின்றார் - நன்மை
திகழ யெண்ணுகிறார்.

எத்தனை துன்பம் இத்தரை மீதில்
ஏன்தான் தோன்றியதோ - இது
நித்தம் தொடர்கதையோ
துன்பம் தொல்லை வறுமை துயரம்
நீங்கும் காலமெதோ - எங்கும்
ஏங்கி வாழுவதோ?

எண்ணத் தூய்மை யில்லாச் செயலால்
மண்ணில் தீதுகளாய் - விளைந்த
நிகழ்வே அறுவடையாய்
உண்மை அன்பு பண்பு நீதி
ஓங்க வுழைத்தாலே - தீது
நீங்கி வாழ் சிறக்கும்.

●●●

- கவிஞர் மருதூர் ஜமால்தீன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனியே விலகு

- கவிஞர் அலியார் T.O.
சம்மாந்துறை.

மெல்லி கரத்தால் யெந்தன்
மேனியைத் தடவிச் சென்று
பொல்லாத குளிரால் என்னை
புலம்பியே தவிக்க வைக்கும்
கல்லையும் கரைக்கும் கொடிய
கார்த்திகைப் பனியே உந்தன்
வல்லமை தன்னைச் சொல்ல
வார்த்தையை அறியேன் நானும்.

போர்த்திய ஆடை தன்னை
பிடித்துமே விலக்கி உள்ளே
கார்த்திகைப் பெண்ணே யுந்தன்
கைகளால் தடவி யெந்தன்
நேத்திரம் தன்னில் தூக்கம்
நெருங்காமல் தடுக்கும் உன்னில்
ஆத்திரங் கொண்டேன் நானும்
அகன்றிடு பனியே நீயும்.

கட்டிய ஆடை தன்னைக்
கழற்றியே கார்த்திகைப் பெண்
விட்டுமே எறிந்தாள் அதுவும்
விழுந்திட்ட புதர்க ளெல்லாம்
பட்டினால் போத்தினால் போல்
பார்ப்பவர் மனதில் நல்ல
கெட்டியாய் இடம் பிடித்து
கிளர்ச்சியை உண்டு பண்ணும்.

வயல்வெளி ஆறு குளமுடன்
வழிபாட்டுத் தலங்கள் எல்லாம்
அயலிலே நெருங்க விடாமல்
அடைத்திட்ட பனியே உந்தன்
இயலுமை சொல்ல வெந்தன்
இலக்கிய அறிவே கொஞ்சம்
புயலெனப் பொழிந்தாய் போதும்
புறப்படு கதிரோன் வரட்டும்.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதைப்பு

அவர்களை முந்தி நான் எழும்பி விட்டேன்!
காலையின் சாலைகளை பார்ப்பது பெரும் அழகு!

சூரியன் எழுந்து மனித நடமாட்டங்கள் தொடங்கும் முன்
பறவைகள் அவசரமாக தன் தேவைகளை நிறைவு செய்கின்றன!

குளிர்காற்று
பனித் துளிகள்
தனக்குரிய சேட்டைகள் புரிந்தாலும்
இயற்கையோடு எனக்கு எப்போதும் கோபமில்லை!

ஒன்றன்பின் ஒன்றாக அசையத்தொடங்குகின்றன ஊர்
சாலை படிப்படியாக தேய்கின்றன ஒரு கையளவு நிலவைப்போல் !

இரவெல்லாம் கண்விழித்த நாய்க் கூட்டங்கள்
தன் பெரும்கடமையை முடித்தமாதிரி சாலையின் ஓரங்களில் பெரும் அணிவகுப்பு!

வெள்ளைப் பறவைகள் பள்ளி வளவுக்குள்
எழுந்து பேசுகின்றன அவர்களின் எதிர்கால எழுத்துக்கள்!

திரும்புகிறேன்,
என் வீட்டு கடிகார முள் குத்துகிறது அவசர அவசரமாக ஆயிரம் சுமைகளுடன்
விரைகிறேன்
என்னை விதைக்கும் இன்றைய பொழுதின் ஓட்டத்துக்குள்!

●●●

- கவிஞர் அபார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னை காதலிக்கிறேன்

- கவிதாயினி நிஸா இஸ்மாயில்.

என் உள்ளத்தில் வாழ்பவனே
உயிரிலும் மேலானவனே
என்னுயிரையே உனக்காய்
அர்ப்பணிக்க மாதவம் இருக்கிறேன்

நீ தந்த நூலை
தவறாமல் வாசிக்கிறேன் அதில்
நீ எனக்காய்
தந்திருக்கும் வரிகள் ஏராளம்

உன் கோபத்திற் காளாகமலிருக்க
நொடிக்கு நொடி
கெட்ட ஜந்துக்களிடமிருந்து
விலகி யிருக்கிறேன்

என் பார்வைகள்
என் கேள்விகள்
என் நாவினில் உதிரும் சொற்கள்
எல்லாமே உன்னை நோக்கித்தான்

உள்ளத்தை ஒவ்வொரு நொடியும்
உனக்காய் அர்ப்பணிக்கிறேன்
எனதொவ்வொரு அடியும்
உனை நினைவூட்டியே நகர்கின்றன

என் எண்ணங்களில் தூய்மையை
உணர வைத்தவனே
உன்னால் புத்துணர்வு பெறுகிறேன்
உனை உண்மையாய் நேசிக்கிறேன்

உனக்கு அடிபணிகிறேன்
உன்னிடம் ஓர் நாள்
வந்துசேரத்தானே போகிறேன் அதற்கான
முன்னாயத்தங்களோடு வாழ்கிறேன்

இவ்வுலகம் ஒரு நாடகமேடை
இங்கு நடிப்பதற்காக வந்துள்ளேன்
இதனையுணர்ந்தே உனக்கு
அஞ்சி பயணிக்கின்றேன்.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளைகும் நீ

நீயொருநாள்
ஹிதாயத் பெறுவாய்,
நீயே ஓடிவந்து
என் படலையைத் திறந்து
பள்ளிக்கனுப்புவாய்.

நீயொருநாள்
ஓடிவருவாய்,
உரத்து ஓதச்சொல்லி
குர்ஆனை நீட்டுவாய்.

நீயொருநாள்
சிரித்து மகிழ்வாய்,
உன்னிலிருந்த சினம் மாறி
என்னோடு உண்டு களிப்பாய்.

நீயொருநாள்
நிமிர்ந்து நிற்பாய்,
நிலையான தோளென்று
என்னைத்தான் எழுதுவாய்.

நீ நேராய் நிற்கும்வரை
நான் துஆவைத் தொடர்வேன்,
நீயெல்லாம் நீங்களாகி
நேர்மையான ஆட்சி கேட்பீர்.
அன்று
எனது தெருக்களில் மட்டுமல்ல
உங்கள் மனங்களிலும்
புரியாணி மணக்கும்.

●●●

- கவிஞர் மாளிகா அஸ்ஹர்.

## பழப்பு

விழுதுகள் வேண்டி
விதைக்கப்பட்ட மரம்
உச்சியில் ஒட்டுண்ணிகள்
அடியில் காளாண்கள்
ஓயாத மழை
காளாண்கள் காணாமல் போகலாம்
ஒட்டுண்ணிகள்
விழுதுகளைக்கூட
ஆர்ப்பரிக்கலாம்

அணை உடைப்பெடுத்த
வெள்ளம்
வேரோடு காணாமலும்
போகலாம்

மாணவர்கள்
வரலாற்று பாடத்தில்
சில குறிப்புகளை
எடுத்துக்கொண்டிருப்பார்கள்.

●●●

- கவிஞர் எம் ஜீ யே பரீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதவை அவள்

வாழ்வாதார நம்பிக்கை
வாழ்க்கைப் பயணத்தின்
இடைநடுவில் தவிக்கவிட்டு
இப்பிரபஞ்ச வாழ்வை
முடித்தவனாய் உயிரற்று சாய்ந்தபோது

செய்வதறியாது நிலைகுலைந்து
கதறியழுத காட்சியன்று
காண்பவர் கண்களையும்
குளமாக்கியது

கலைந்த கேசம் குழிவிழுந்த கண்கள்
அழுக்குப்படிந்த ஆடை
இளவயது மங்கை

கங்கை நதிபெருகி வழிந்தொழுகும்
காட்சியைப்போல் கண்ணீர்
பெருகியோட தோளிலே குழந்தை
மடியிலே அதன் தங்கை

அந்தச் சிறுசுகளின் எதிர்கால
வாழ்வு என்னாகுமோ
சுற்றி நின்ற மனங்களிலும்
சோகம் இழையோட
சூழ்நிலையை அவனின் அகால மரணம்
தோற்றுவித்திருந்தது

கதறிக் கதறி அழுதாள் அந்த
அன்னை

உருக் குலைந்த ஓவியமாய்
அவள் நிலையை யார் வரைந்தார்
இப்பாரினிலே அன்று

வருடங்கள் பல கடந்து
வழியிலே கண்ட போது
வெண்மை உடைதரித்த
பாடசாலை சீருடையில்
வெள்ளை புறாக்களாய்
இரண்டு குழந்தைகளை
வழியனுப்ப வந்து நின்றாள்

கண்களிலே வண்மம் தெரிந்தது
வறுமை வாழ்வோடு போராடி
ஏழ்மை எனும் இரும்புக் கரங்களை
உடைத்தெறிய
துணிந்து விட்டாள்

எதிர்கால விடிவெள்ளி
விதவை அவளுக்கு
பெற்றெடுத்த குழந்தைகளே!

●●●

**- கவிஞர் மருதூர் மௌஜூன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முளைத் தீருடர்கள்

மலைகளாய் பிருமாண்டம்
கள்ள மவுனத்தில் அடிவருடிகள்
இரும்பு மனிதரல்ல
இரக்கமற்றவர்
கல்லாய் சிலையாகி நிற்கிறார்
உதிர்ந்த இலை கேள்வி கேட்டது
செழிக்கும் தளிர் மௌனம் காத்தது
மரணம் மரணிக்காத ரணம்
பசிக்கிறது என்கிறது குழந்தை
தவிக்கிறாள் தாய்
பரிதவிக்கிறான் தகப்பன்
ஐவகை நிலங்கள்
காணாமல் போய் விட்டன
அடையாளங்கள் யாவும்
அழிந்து விட்டன
வயிற்றுக்கு அலைகிறார்கள்
சகல ஜனங்கள்
பாசி படர்ந்த பாறைகளின் மேல்
பனித்துளிகள்
தினம் சூரியன் தாகம் தணிக்கும்
நீரருந்த அலையும் கேளையாடுகள்
விழிகள் ஊற்றெடுக்கின்றன
படுக்கை நனைந்து தெப்பமாகிறது
அவனை எதிர் நோக்கி அவள்
நினைவுகளில் கருகும் இதயங்கள்
நிதம் உயிர் வதை போராட்டம்
காதலே...காதலே...
தாலாட்டுப் பாடலில் வழிகிறது
அன்பு
தலைமுறைகள் செழிக்கப்
பாயும் ஜீவநதி
தாயின் பெருங் கருணைகருணை
காற்றும் மரமும் பேசுகின்றன
கவிதைகள் உதிர்கின்றன
காலங்கள் பூக்கின்றன
துப்பாக்கிகள் வெடித்தன
காடு மலைகள் அலறின
இயற்கை துடித்துக்
கொண்டிருக்கிறது
பகலில் சூரியன்
இரவில் நிலா, நட்சத்திரங்கள்
ஆகாய மரம் தினம் பூத்து
உதிர்க்கிறது.
உன்னில் நான்
என்னில் நீ
உலகம் காணாமல் போனது
மலைகள் உடைபடுகின்றன
சாலைகள் விரிகின்றன
பறவைகள் நடந்தே போகின்றன
குளங்கள் நிறைய குப்பைகள்
கரைகளைச் சுற்றி மனிதக்கழிவுகள்
நீர் தேடும் ஊர்
கோயில் உண்டியலில்
கோடி கோடியாகப் பணம்
புரோகிதரின் மடியில் சில்லறை,
ரூபாய்கள்
வாசற்படிகளில் பிச்சைக்காரர்கள்
கை நிரம்ப பூக்கள்
மனம் ததும்ப தேன்
குடம் நிறைய தண்ணீர்
தீராத தாகம்
பச்சை நிறக்கடல்
மீன்களின் சடலங்கள்
பூ பூத்த செடி
பறிக்க விரல்கள் தயங்குகின்றன
பறவைகள் கலவரப்படுகின்றன
பூனை மரமேறுகிறது
நெஞ்சு நிறைய இனிப்புகள்
ப்ரியம் ஆடும் ஆனந்த கூத்து.

**- கவிஞர் வசந்ததீபன் -**
**(தேனி மாவட்டம், தமிழ்நாடு.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கவிதைகள்

## பைத்தியக்காரர்கள்!

என் மனைவி
எனைவிட்டுப் பிரிந்து
இன்றுடன் மாதங்கள்
இத்தனை என்கிறார்கள்.

என்னிதயத்துள் இறுக்கமாய்
என்னவள் புதைந்துகிடக்கிறாள்
எனை விட்டும்
எவ்வாறு பிரியமுடியும்?

இவர்கள் பைத்தியக்காரர்கள்!

• • •

## ராசியில்லாதவன்!

துயிலெழுந்து நான்
விழிக்கையில் - என்
முகம் பார்த்துப் புன்னகைக்க
ஆயிரம் உறவுகள்!

இருந்தும் என்ன பயன்?
உன் நிலவுமுகம் பார்த்து
நான் புன்னகைக்க - இன்று
நீ இல்லையே!

நானொரு ராசியில்லாதவன்!

• • •

- மருதமுனை எஸ் ஏ கப்பார்.

## வாழ்வு

இருவரின் சந்திப்பும்
அழகான மலையுச்சிப் பூக்களின்
வடிவில்
சின்னச்சின்னதாய்
தொடர்வனவாய் நிகழ்கின்றன

அதிகம் கவலைப்பட்டுக்கொண்ட
பிரிவின் ஆரம்ப நாட்களில்
மலையுச்சிகள்
பூக்களற்று
சோகத்தின் பெரும் பனிமூட்டம்
நிறைந்ததாய் இருந்தது

கண்களைத் திற
பூக்களை ரசி
பின்பும்
கண்கள் இரசிப்பதற்கானவையா
பார்ப்பதற்கானவையா என்று
இலக்கியம் தவிர்க்கும் கேள்வி கேள்

சந்திப்பின் நிமித்தம்
அத்தனை கோபத்தையும் பரிமாறு
பூக்கள் தங்களை வெளிப்படுத்த
பிரிவின் கொடிய பனி விலக
உருகிய கோபம் உறைய வேண்டும்
பொன்னின் ஒரு சொட்டு
தங்கமாவது போல
அல்லது
ஒரு மழைத்துளி முத்தாவது போல

சந்திப்புக்களை
கோடைகால மலையுச்சிகள்
அழகான சிறிய பூக்களால்
கொண்டாடும் போது
வாழ்வெனும் பேரண்டம்
பனிப்பொழிவுகளின் இசைகளோடே
தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறது

**- கவிஞர் முஜாஹித் ஷரீப்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டுகோள்...

- கவிதாயினி
மயிலிறகு மனை
**ஷி:.பானா அஸீம்.**

நான்
யாருக்கேனும்
நன்றி கூற வேண்டியிருந்தால்
நினைவு படுத்துங்கள்

நான் யாரிடமேனும்
மன்னிப்புக் கேட்கவேண்டியிருந்தால்
ஞாபகமூட்டுங்கள்

நான் ஏதும் நினைக்கப்போவதில்லை
ஒரு சில வேளை மறந்து
போயிருக்கலாம்

இவ்வாழ்க்கை
தீர்ந்து போவதற்கிடையில்
தீர்க்கப்பட வேண்டிய
கணக்குகளிருந்தால்
தீர்த்துக்கொள்வது நல்லதே

யாருக்கேனும் என் மீது
வருத்தங்களிருக்கலாம்

யாரும் என் மீது
கோபத்தோடு இருக்கலாம்

உங்களுக்கும் எனக்குமிடையில்
ஏதேனும்
மனத்தாங்கல்களிருக்கலாம்

நீங்கள்
எதையோ மனதில்
வைத்துக்கொண்டு..

பேசிக்கொண்டிருந்த நீங்கள்
பேசாமல் போய்விடுவதும்

என் அழைப்புக்களை
கண்டு கொள்ளாமலிருப்பதும்

குறுஞ்செய்திகளுக்கு
பதிலளிக்காமலிருப்பதும்

என் புன்னகையை
புறம்தள்ளிவிடுவதும்
என் பேச்சை
அசட்டை செய்வதும்

என்
ஒரு
தேநீர்க் கோப்பையைக் கூட
சுவாரஸ்யமற்றதாக்கிவிடுகிறது

அத்தனை பலவீனமானவளா
நான்
இல்லை
எதற்காக நீங்கள்
உங்களை மாறிக்கொண்டீர்கள்
என்பது தெரியாமல்

என்னாலும்
உங்களை தூக்கிப்போட
முடியாமல் இருப்பதுதான்

உங்கள் மீதும்
எனக்கு
வருத்தமிருக்கிறது
கோபமிருக்கிறது
மனத்தாங்கல்களிருக்கிறது

ஆனால்

அவற்றுக்காகவெல்லாம்
என்னால்
உங்களை
கைவிட்டுவிட முடிவதில்லையே!

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் இந்தத் தடுமாற்றம்.

வானம் மழையைப் பொழிகிறது
வனங்கள் மழையைச் சுரக்கின்றது
வாவிகள் நீரை நிறைக்கின்றது
வரைகளோ அழகைத் தருகின்றது

கடலோ கனிவளம் குவிக்கின்றது
காற்றலை உயிரைக் காக்கின்றது
கழனிகள் அன்னம் தருகின்றது
கரைகளோ அலையைத் தடுக்கின்றது

ஆறுகள் நீரைத் தருகின்றது
ஆகாரம் பூமியில் விளைகின்றது
ஆசாரம் அன்பை வளர்க்கின்றது
ஆலயம் புனிதம் நிறைக்கின்றது

பூமியே புகலிடம் தருகின்றது
பூங்காக்கள் பூரிப்பைத் தருகின்றது
புன்முறல் அன்பை வளர்க்கின்றது
பூணாரம் அழகை அளிக்கிறது

இயற்கையின் இயற்கையே இவை
இறைவனின் அருட் கொடை இவை
இருந்தும் ஏன் செயற்கையாய் அவை
இடுக்கண் கொடுப்பதேன் அவை

வான் மழை அடாது பெய்வதும்
வரைகள் சரிந்து வீழ்வதும்
வாவிகள் வற்றிக் காய்வதும்
வனங்களோ பற்றி எரிவதும்

கடலலை கரையைக் கடப்பதும்
காற்றலை புயலாய்ச் சுழல்வதும்
கட்டுக்கடங்கா நோய்கள் வருவதும்
களஞ்சியம் வற்றிப் போவதும்

ஏன்..........?

●●●

*— கவிஞர் சிக்கந்தர் அகமது,*
*நிந்தவூர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமையில் தனிமை.

வயோதிக சாயலோ வதனத்தில்
முயலாமையோ முக வரியில்!!

உயிரற்ற பார்வை உணர்த்தும்
உலக வாழ்வின் முடிவுரை!!

சிந்தும் விழியின் உவர்ப்பில்
வாழ்ந்த நாட்களின் நினைவுகள்!!

அசைவற்ற வாழ்வின் மீதத்தில்
ஓசையற்றுக் கிடக்கும் பெரும்
பொழுதுகள்!!

வசந்தத்திற்கு காத்திருக்கும் மலர்களாய்
மனம் பிள்ளைகளை நாடுதே
வருகைக்காய்!!

உடைந்த புல்லாங்குழலில்
கசியும் ஏகாந்த ஓசையாய்..
நிர்மூலமான நிகழ்காலத்தில்
நினைவுகளே மிச்சமாய்!!

ஒற்றையாய் நிழல் தந்த ஆலமரம்
ஒற்றையாக நிற்கிறது நிழல் வேண்டி..!!

•••

**- கவிச்சோலை ராஜலக்ஷ்மி.**

கவிஞர்களே!

வெண்ணிலா

கவிதை மஞ்சரி இதழ்: 04 – ஜனவரி 2022 பற்றிய தங்களது கருத்துகளை விரைவில் எமக்கு அனுப்பிவைக்கவும்.

அத்துடன் வெளிவரவிருக்கும்

வெண்ணிலா

கவிதை மஞ்சரி இதழ்: 05 – ஏப்ரல் 2022 இல்
பிரசுரிக்கத் தகுந்த
கவிதைகளை உங்களிடமிருந்தும் எதிர்பார்க்கிறோம்.

அனுப்பவேண்டிய அஞ்சல் முகவரி:


வெண்ணிலா
கவிதை மஞ்சரி
ஆசிரியர்: கவிஞர் எஸ். ஏ. கப்பார்,
378/2, ஸம் ஸம் வீதி,
மருதமுனை–03 #32314.

மின்னஞ்சல்:
kavignarsagaffar@gmail.com

வட்ஸ்அப்:
**077 6968 671**


– நன்றி. –




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புயலாய் மாறடி பெண்ணே!

கண்ணெனப் பேச்சில் சொல்லும்
... கல்மனச் சமூகம் உன்னை!
பெண்ணென இழிவாய்க் கூறிப்
... பெருமைகள் சிதைக்கச் செய்யும்!
மண்ணதில் சமமாய் எண்ண
... மறுத்திடும் மறவா உண்மை!
விண்ணிலும் கால்கள் பட்டு
... வீறுடன் நடப்பாய் பெண்ணே!

உயர்வினை இகழ்வார் தம்மை
... உதறியே தள்ளிச் செல்வாய்!
செயலதில் திறனைக் காட்டு!
... சீறிடும் அலையாய்ப் பாய்வாய்!
கயவரை எதிர்த்தே நின்று
... காட்டியே கொடுத்து வீழ்த்து!
புயலென மாறிப் பெண்ணே
... பொறுப்பினை ஏற்று வெல்வாய் !

தற்கொலை தீர்வே அன்று!
... தன்னிலை உணர்வாய் வென்று!
கற்றது பலனை ஈயும்!
... கருத்துடன் நினைவில் கொள்வாய்!
வெற்றியும் உன்னைச் சேரும்!
... வியத்தகு சிகரம் ஏற்றும்!
பெற்றிடும் புகழும் பேரும்
... பீடுற உயர்த்தும் பாரில்!

●●●

**- ஓசூர் மணிமேகலை.**

## அவள் அழகில் நனைகிறது அந்திமழை!

இருள் நிறைந்த வானம்
கரைந்து கரைந்தே தீர்கிறது
அவள் கூந்தல் இருளுக்கு அஞ்சி!

அவள் புன்னகைக்கு
ஈடு கொடுக்க முடியாமலே
உடைந்து உடைந்து வீழ்கிறது
தோற்றுப் போன மின்னல்!

அவளில் நனைந்ததால்
ஜலதோசம் பிடித்துப் போனது
சொட்டுச் சொட்டாய் தூறும்
இந்த அடை மழைக்கு!

இடி இடித்த முழக்கமும்
அடங்கிப் போனது
அவள் கோபப் பார்வைக்குப்
பயந்திருக்கும்!

அவள் பாதம் தழுவிய மண்ணில்
தேகம் புதைத்து உறைகிறதே
மோட்சம் அடைந்து விடும்
வானிலிருந்து வந்த இந்த மழைத்துளிகள்!

●●●

**- வேலணையூர் ரஜிந்தன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவு மீறிய ஆசை

- கவிஞர் சுலைமாலெவ்வை சின்னத்தம்பி, பொத்துவில்.

சிறு கூட்டின்
சிறு பறவை நான்
சிறகு விரிக்க நினைத்தேன்
சிகரம் தொட

ஆகாய காற்று
அள்ளி வீச என்
ஆசைகள் எல்லாம்
அடித்து வீசப்படுகிறது

இப்போது என்
இல்லம் செல்லும் வழி தவறி
இருக்கும்
இடமும் புரியாது ஏதோ ஒரு
வனத்தில்
நான்..

என்னை சுற்றிச் சுற்றி ஒரு பறவை
என்னை விசாரித்தவாறு
எனக்கு புரியவில்லை அதன் பாசை
என் பாசை அறியா அப் பறவை

என்னை விட்டு செல்கிறது...

தனிமரம் ஒன்றில் நான்
தனித்து நிற்கிறேன் இப்போது
தன் சிறகுகள்
தளர்ந்தவாறு.

●●●

# தந்தையும் நானும்

தந்தையெனும் வரத்தை
தந்தானே இறைவன்
தன்னலம் மறந்து
என்னலம் தேடியே
உழைத்தாரே நாளும்
உறங்காத போதும்
வெடிச் சத்தத்தில்
அந்த யுத்தத்தில்
கொடுத்தாரே அன்பும்
கொடையாகக் கல்வியும்
தேவைகள் தொடர்ந்திடவே
பறந்தேனே பலநாடு
துடிக்கும் மனதிற்கு
அலைபேசி ஆறுதலாய்
முதுமையின் முகமும்
குழந்தையின் குணமும்
கோடிகள் இருந்தும்
கூடிடவே வழியில்லையே
கொள்ளைநோயும் கோடு
போட்டு மூடியதே
விமானப் பயணமும்
விண்வெளி உலகமாய்
விடியலுக்காய் காத்திருக்கேன்
விரைந்துச் சென்றிடவே......

●●●

- கவிதாயினி இரா. தேவி
(இந்தியா.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வினை உணர் மனமே!

யாரின மாகினும்
ஓரினமென்பதில்
சீரினை நினை மனமே!

வேறினம் காணவே
வெறியுட னாடிடும்
குறியினை மற மனமே!

ஈரினம் அழித்திங்கு
ஓரினம் வாழ்ந்திடும்
நெறியினைத் தறி மனமே!

வாழ்வதும் வீழ்வதும்
வல்லவன் தயவென்னும்
வல்லமையுணர் மனமே!

தலைமையும் கலைவதே
நிலையெனு முலகிலே
கொலையினை வெறு மனமே!

இறை மறை வழிகளை
நிறைவுடன் பெற்றிடும்
முறைகளையறி மனமே!

ஆடிய நாடகம்
மூடிடும் மூச்சுடன்
அடங்கிடும் புரி மனமே!

பெரியவர் சிறியவர்
எவரெவ ராகினும்
பிரிதலையறி மனமே!

பிறப்பினை இறப்பினை
பிணைத்தவன் இறைவனை
நிறைத்திங்கு வாழ் மனமே!

●●●

**-கவிஞர்**
**எம் எச் ஏ கரீம்.**

# கடதாசிக் கடல்

கடலை வரைவதற்கு
முயற்சித்துத் தோற்றுப் போகிறேன்.
அதற்குள் துள்ளும் மீன்களை
அதற்குள் நட்டும் நண்டுகளை
அதற்குள் நகரும் மட்டிகளை
அதற்குள்
அதற்குள் என வாழும் மற்றவைகளையும்
வரைவதற்கு குழந்தைகள் பொருத்தமானவர்கள்.
அவர்கள் சுழியோடிப் பழகியவர்கள்
அவர்கள் மீன்களாகுவர்
அவர்கள் நண்டுகளாகுவர்
அவர்கள் மட்டிகளாகுவர்
கடதாசி அவர்களின் பெருங் கடல்.

●●●

**- கவிஞர் டீன் கபூர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் பதிவு.

**-ஜலால்டீன் மஹாகவி.**

வெண்ணிலா கவிதை மஞ்சரி.

வெண்ணிலா இதழ்கள் 02 (ஜுலை), 03 (ஒக்டோபர்) கிடைக்கப் பெற்றன. நன்றி ஆசிரியர் அவர்களுக்கு.

கொரணா முடக்கங்கள் மற்றும் பொருளாதார வீழ்ச்சிகளுக்கு மத்தியில் இரண்டு மஞ்சரிகளை ஒரே தரத்தில் வெளியிட்டிருப்பது மெச்சத்தக்கது.

சஞ்சிகை என்றால் மல்லிகையும் டொமினிக் ஜீவாவும்தான் நமது நினைவுக்கு வருவது வழமை. மல்லிகையின் மணம் பெற்றுச் சுவாசித்த ஏகப்பட்ட எழுத்தாளர்களும் வாசகர்களும் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் மல்லிகை ஜீவா நம் மத்தியில் இப்போது இல்லை. இருந்தும் அவர் நினைவுகள் எமது மனத்திரைகளில் நினைவலைகளாகவே உள்ளன.

இதே நேரம் பல ஆண்டுகளுக்கு முன்னர் "பெருவெளி" எனும் ஓர் இலக்கிய சஞ்சிகை எமது பிரதேசத்தில் வெளிவந்து இடையில் நின்று போனது பெரும் இழப்பாகும். மீண்டும் அது புனர் ஜென்மம் எடுக்க வேண்டும் என்பது நமது அவா.

தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் "வியூகம்" ஒரு நிறைவான சஞ்சிகையை வாசிக்கின்ற உணர்வை ஏற்படுத்துகின்ற அளவுக்கு தகுதி வாய்ந்ததாக உள்ளது. இது போலவே ஒரு நல்ல சஞ்சிகையின் வெளிச்சம் வெண்ணிலாவிலும் வெளிப் படத்தான் செய்கிறது. தனியே ஒரு கவிதை மஞ்சரி என்பதற்கு அப்பால் இதழ் 02 இல் மல்லிகை ஜீவா, செய்யத் ஹசன் மௌலானா, மருதூர் வாணர், ஆ. மு. ஷரிபுத்தீன் போன்றோர் பற்றிய குறிப்புகளும் புன்னகை வேந்தனினதும் இன்னும் பல புலவர்களினதும் நினைவுகள் பகிரப்பட்டுள்ளமை பாராட்டு தலுக்குரியது. அதே போல் இதழ் 03 இல் நந்தினி சேவியர், மருதூர் ஏ மஜீத் பற்றிய குறிப்புகளும் பயனுள்ளவை. கவிதை என தெரிவு செய்யப்பட்டவை களில் அனேகமானவை ஈழத்தில் எழுதிக் கொண்டிருக்கின்ற நல்ல கவிஞர்களின் நல்ல கவிதைகள். அதாவது கவிதை என்று சொல்லக் கூடிய பக்குவம் அடைந்த பல கவிதைகள் இங்கு காணப்படுகின்றன. இதே நேரம் ஒரு சில கவிஞர்கள் அன்ன நடை நடந்து தன் நடையை இழந்திருக்கின்றனர். இவர்கள் டெரிடாவின் "கட்டுடைத்தல்" தத்துவம் மற்றும் மிஷேல் ஃபூக்கோ போன்றோரின் கோட்பாடுகளை நன்கு விளங்கிக் கொண்டு எழுதுவது ஆரோக்கியமானது. இன்னும் சிலர் அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் கலீல் ஜிப்ரான், பப்லோ நெருடா, கவிக்கோ அப்துல் ரகுமான் போன்றோரின் கவிதைகளை வாசித்து பயிற்சி எடுத்துக்கொண்டு எழுதுவது நல்லது. இவ்வாறான கருத்துக்களை கூறக்கூடியளவுக்கு இடமளிக்கக் கூடிய ஒரு முழு சஞ்சிகையாக வெண்ணிலா எதிர்காலத்தில் பிரகாசிக்க வேண்டும் என்பது நமது பிரார்த்தனை.

ஒரு கவிஞரின் ஒன்றுக்கு மேற்பட்ட கவிதைகளை ஒரே மஞ்சரியில் பதிவிடுவதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. அட்டைகள் அழகாகவுள்ளன. அட்டை வடிவம் காலத்தின் மணத்தோடு கலந்து வீசினால் இன்னும் சுகந்தமாயிருக்கும்.

மொத்தத்தில் வெண்ணிலா காத்திரமான படைப்புகளைக் கொண்ட ஒரு கவிதை மஞ்சரியாக வலம் வருவது ஈழத்தின் தற்கால எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் ஒரு வரம் எனலாம்.

வெண்ணிலா ஆசிரியருக்கு மிகுந்த பாராட்டுக்கள்.

15-12-2021.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களிடமிருந்து

'வெண்ணிலா'வின்
இதயம் தொட்டதில்
மகிழ்ச்சி எனக்கும்...

'வெண்ணிலா' ஆசிரியர் இலக்கிய
உறவுகளை இனிதாக்கிக் கொண்டாடி
மகிழ்பவர்.

தனது இலக்கியக்காதலையும்
தான் ரசித்து கைகுலுக்கி
மெய் சிலிர்த்த வரிகளையும்
சான்றோர் கண்களுக்கு விருந்தாக்கி
மகுடம் சூட்டிப் பார்க்கிறார்
தனது 'வெண்ணிலா' மஞ்சரி மூலமாக.

அந்தவகையில் அவரது
'வெண்ணிலா' இதழ் 02, 03 ல்
எனது கவிதைகளும் இடம்பிடித்துள்ளன.

இவ்விதழ் பதிப்பானது
இளைய தலைமுறைக்கும்,
நேச உறவுகளுக்கும்
களம் அமைத்துக் கொடுத்து
வளப்படுத்தும் ஒரு தலைசிறந்த
முயற்சியாகவே கருதுகிறேன்.

'வெண்ணிலா'
உன் ஆயுள் நீண்டு ...
மாதங்கள் தோறும் உன்
வண்ணக்குளியலில்
தமிழ்த்தாய் தன் தாகம்
தீரவேண்டுமென வாழ்த்தியவளாக.
வாழ்க..
வளர்க...

**- வானம்பாடி முஜா,**
**நிந்தவூர்.**

தான் ரசித்த
எழுத்தோவியங்களை
தன்னோடு மட்டும்
மட்டுப்படுத்திக் கொள்ளாமல்,

"வெண்ணிலா" எனும்
ஒரு தளத்தை உருவாக்கி
அதில் கவிதைகளையும்
ஏனைய விடயங்களையும்
அதனாசிரியர் மேயவிட்டிருப்பது
மனதுக்கு இதமாக உள்ளது.

கலைஞர்கள் அனைவருக்கும்
அவசியம் தேவை களம்...
அதை வெகு இலகுவாய்
வெண்ணிலா கவிதை மஞ்சரி
எமக்கு வரமாய்த் தந்து
வாய்ப்பளித்திருக்கிறது.

வெண்ணிலா சுமந்துவரும்
அனைத்து விடயங்களும்
அற்புதமாய் இருப்பது கண்டு
அகம் மகிழ்ந்தே போகிறது


தொடர்ச்சியாய் இவ்விதழ் தடையின்றி
வெளிவர
எல்லாம் வல்ல அல்லாஹ்
என்றென்றும் அருள் புரியட்டும்.

**- எம். ஏ. மாஹிறா**
**(ஹில்மா)**
**மருதமுனை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிடைக்கப்பெற்ற நூல்கள்






**நூல்: மனிதம் வாழும்**


ஆசிரியர் : கவிஞர். மருதூர் ஜமால்தீன்

பக்கங்கள்: 88 - பதிப்பு : 2019.

தொடர்பு : 077 5590 611

வெளியீடு : பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம்.

---






**நூல்: மண்ணில் உதிராத பூக்கள்**

ஆசிரியர் : கவிஞர். மலீஸ் அமீன்

பக்கங்கள்: 60 - விலை: 300.00 - பதிப்பு : ஒக்டோபர் 2021.

தொடர்பு : 077 2788 950.

வெளியீடு : பைத்துல் ஹெல்ப் நண்பர்கள் வட்டம், மருதமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெண்ணிலா இதழ்: 01 முதற் பிரதிகளை கவிஞர்களான எம். எம். நௌபல் (பிரதேச செயலாளர்) மற்றும் புன்னகை வேந்தன் ஏ. எம். பாறூக் (ஆங்கில மொழிபெயர்ப்பாளர்) ஆகியோருக்கு வழங்கிய தருணம்.




வெண்ணிலா இதழ்: 02 மற்றும் இதழ்: 03 முதற் பிரதிகளை **4G Handloom Private Ltd.** முகாமைத்துவப் பணிப்பாளர் பதுறுஸ் ஸமான் பஹ்த் ஸமான் அவர்கள் பெற்றுக்கொண்ட தருணம். நடுவில் நிற்பவர் கவிஞர் தம்பிப்பிள்ளை நடேஸ் அவர்கள்.

Printed by : Jesa Grafix - 0756569393

படப்பிடிப்பு மற்றும் பத்திரிகைச் செய்திகள்:
சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் பி. எம். எம். ஏ. காதர் அவர்கள்.


இச் சஞ்சிகை, இல. 378/2, ஸம் ஸம் வீதி, மருதமுனை-03, டிஜிட்டல் இன்பொமேசன் சிஸ்டம் (DIS) நிறுவனத்தினரால் ஜனவரி 2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org